**ORIGINAL ARTICLE**

# இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள்: ஒரு கோட்பாட்டு ரீதியிலான பார்வை

**[ISLĀTTIL PEṆKAḶIṈ URIMAIKAḶ: ORU KŌṬPĀṬṬU RĪTIYILĀṈA PĀRVAI]**

# WOMEN'S RIGHTS IN ISLAM: A THEORETICAL PERSPECTIVE

**அப்துல்லா *[1] / M.M.A. Abdullah *[1]**

[1] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Sri Lanka.
Email: abdullahmma416@gmail.com

*Corensponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/114

**Abstract**

The Spiritual, political, economic, and social rights of women are discussed at various levels. However, violence and oppression against women continue to increase. The charisma of Islam on women's rights is very strong. Thus, the study aimed at examining the concept of Islam in respect of women with the help of its primary sources, Holy Quran, and al-Hadith. Based on the review of the earlier literatures, the study was conducted with the analysis of the research articles, books and internet information on feminism along with information on the spiritual, social, economic and political rights of women found in the primary sources of Islam, classical Islamic literatures and the written works of modern Muslim scholars. The major finding of this study is that although the primary sources of Islam have a history of more than 1400 years, Islam has given proper guidelines for the complete guarantee of women's rights in the modern world and women have enjoyed them in the early Muslim community. This study will be a supportive to future studies based on the concept of Islam on women.

**Keywords:** Feminism, Islam, Women's Rights, Women and Islam

**ஆய்வுச் சாரம்**

பெண்களின் ஆன்மீக, அரசியல், பொருளாதார, சமூக ரீதியான உரிமைகள் தொடர்பில் பல்வேறு மட்டங்களிலும் கலந்துரையாடப்படுகின்றன. எனினும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் ஒடுக்குமுறைகளும் தொடர்ந்தும் அதிகரித்த வண்ணமே உள்ளன. பெண்களின் உரிமைகள் தொடர்பிலான இஸ்லாத்தின் கரிசனை மிகவும் வலுவானதாகும். அந்தவகையில்

பெண்கள் தொடர்பான இஸ்லாத்தின் நோக்கினை அதன் அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவின் துணைகொண்டு கண்டறிவதை பிரதான நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் பெண்ணியம் தொடர்பான நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளத் தகவல்கள் என்பவற்றுடன் இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன், அஸ்ஸுன்னா மற்றும் செந்நெறிகால இஸ்லாமிய இலக்கியங்கள், தற்கால முஸ்லிம் அறிஞர்களின் ஆக்கங்கள் போன்றவற்றில் காணப்படும் பெண்களின் ஆன்மீக, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான தகவல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்கள் 1400 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டிருப்பினும் நவீன உலகில் பெண்களின் உரிமைகள் பூரணமாக உத்தரவாதப்படுத்தப்படுவதற்கான சீரிய வழிகாட்டல்களை இஸ்லாம் வழங்கியுள்ளது என்பதோடு ஆரம்பகால முஸ்லிம் சமூகத்தில் பெண்கள் அவற்றை அனுபவித்தும் வந்துள்ளனர் என்பதே இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாகும். இவ்வாய்வு பெண்கள் தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு உறுதுணையாக அமையவல்லது.

**கருச்சொற்கள்:** பெண்ணியம், இஸ்லாம், பெண்களின் உரிமைகள், பெண்களும் இஸ்லாமும்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 2nd September 2020, revised 26th September 2020, accepted 10th October 2020

**முன்னுரை**

மனித உரிமைகள் என்பவை இனம், சாதி, நிறம், சமயம், பால், தேசியம், வயது, உடல், உளம் ஆகிய வேறுபாடுகளின்றி அனைவருக்கும் உரித்தான அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் ஆகும். இந்த உரிமைகள் மனிதர்கள், மனிதர்களாக பிறந்த காரணத்தால் அவர்களுக்கு கிடைத்த அடிப்படையான விட்டுக்கொடுக்க இயலாத மறுக்க முடியாத உரிமைகளாகளாகும். இம்மனித உரிமைகள் தொடர்பாக அதிக கரிசனை வழங்கப்படும் நவீன உலகில் பெண்கள் தொடர்பாகவும் பரந்த அளவிலான அவதானம் வழங்கப்படுகிறது. அவர்களின் உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக சர்வதேச அளவிலும் பிராந்திய ரீதியாகவும் உடன்படிக்கைகளும் தீர்மானங்களும் சட்டதிட்டங்களும் அமுல்படுத்தப்படுத்தப்படுகின்றன (Naja et al., 2018)[1].

வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து, பெண்கள் பல்வேறு வன்முறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் பாகுபாடுகளுக்கும் உட்படுத்தப்பட்டு வந்துள்ளனர் (Galloway, 2014)[2]. பண்டைய இந்தியாவில் கணவன் மரணித்தவுடன் அவன் எரிக்கப்படும் தீயில் மனைவியும் குதித்து தற்கொலை செய்து கொள்ளும் "உடன்கட்டை ஏறுதல்" எனும் வழமை நிலவி வந்தது; இஸ்லாத்துக்கு முந்தைய அரேபியாவில் பெண் பிள்ளைகள் உயிறுடன் புதைக்கப்பட்டனர் (Galloway, 2014)[2]. அத்தோடு பண்டைய யூத சமூகத்தில் சிறுபராயத்திலிருந்தே பெண் வேலை

செய்வதற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டதோடு விரும்பியபோது அவளை விற்றுவிடும் உரிமை தந்தைக்கு வழங்கப்பட்டிருந்தது; தனக்கென ஆண் சகோதரன் இல்லாதபோதே அவள் தந்தையின் சொத்தில் பங்கு பெறும் நிலை அச்சமூகத்தில் நிலவியது. மேலும் ஆதம் (அலை) அவர்கள் சுவனத்திலிருந்து வெளியேற்றப்பட பெண்ணே (ஹவ்வா (அலை)) காரணமாக இருந்ததாகவும் அதனால் அவள் சபிக்கப்பட்டவள் எனும் கருத்தும் அவர்களிடம் நிலவியது. அதேபோல் பண்டைய கிறிஸ்தவ சமூகத்தில் பெண் ஷைத்தானின் வாயில் (தீமையின் வாயில்) எனவும் அவளோடு தொடர்பு கொள்வது குற்றச் செயல் எனவும் கருதப்பட்டது (Al-Habdan, 2003)[3].

இவ்வாறான ஒடுக்குமுறைகளின் விளைவாகவே கி.பி 18 ஆம் நூற்றாண்டில் பெண்களை தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள், கட்டமைப்புக்கள் மற்றும் சமத்துவமின்மை போன்றவற்றை எதிர்க்கும் நோக்கில் மேலைத்தேய நாடுகளில் பெண்ணிய சிந்தனைகள் தோற்றம் பெற்றன (Thiruchandiran, 1998)[4]. எனினும் நவீன உலகிலும் பெண்களுக்கு எதிரான குடும்ப, சமூக, கல்வி, தொழில், அரசியல் சார்ந்த வன்முறைகளும் பாகுபாடுகளும்; ஒடுக்குமுறைகளும் பல்வேறு பரிணாமங்களில் அதிகரித்த வண்ணமே உள்ளன (Lone et al., 2015)[5].

இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் பூரண வழிகாட்டல்களை உள்ளடக்கிய மார்க்கமாகும் (Jazeel et al., 2017)[6]. அந்தவகையில் அல்குர்ஆன் மற்றும் அல்ஹதீஸ் ஆகியவற்றை முதன்மை மூலாதாரங்களாகக் கொண்ட இஸ்லாத்தில் பெண்கள் தொடர்பான கண்ணோட்டமும் மிகவும் தெளிவானதும் நேர்மையானதுமாகும். இஸ்லாம் பெண்களின் அந்தஸ்து மற்றும் அவர்களது உரிமைகள் தொடர்பில் குறிப்பிட்டிருப்பது மாத்திரமன்றி இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப காலங்களில் சமூக, பொருளாதார அரசியல் சார்ந்த பல்வேறு துறைகளில் அவர்கள் பங்களிப்புச் செய்வதற்கான உரிமையும் சுதந்திரமும் உத்தரவாதப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டும் வந்துள்ளன (Haddad, 2019)[7]. எனினும் பெண்கள் தொடர்பிலான இஸ்லாமிய வழிகாட்டல்களைக் கவனத்தில் கொள்ளாது தற்கால நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாத்துக்கு எதிராக பல்வேறு விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன (Alfitri, 2014)[8].

இப்பின்னணியை அடிப்படையாகக் கொண்டே நவீன உலகில் இஸ்லாத்தின் மூலாதாரங்களான அல் குர்ஆன் மற்றும் அல்ஹதீஸ் ஊடாக பெண்களுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் பூரணமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக இஸ்லாமியப் பெண்ணியம் எனும் கருத்தியல் முன்வைக்கப்டுகிறது. மேற்கத்தேய பெண்ணியல் சிந்தனைகள் ஆண், பெண் ஆகியோருக்கு இடையில் பால் வேறுபாடின்றி அனைத்து விடயங்களிலும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் எனும் அடிப்டையைக் கொண்டு அமையப்பெற்றிருப்பினும் இஸ்லாமிய பெண்ணிய சிந்தனையானது பெண்களின் இயல்புகளுக்கு (nature) ஏற்ற உரிமைகள் முறையாக அவர்களுக்கு

கிடைக்கப்பெற வேண்டும் என்பதையே தனது பிரதான இலக்காக கொண்டமைந்துள்ளது (Al-Abed & Hamendi, 2018)[9].

எனவே, இவ்வாய்வானது இஸ்லாத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள பெண்களின் உரிமைகளை கோட்பாட்டு ரீதியாக அதன் மூல ஆவணங்களில் இருந்தும் நவீன துறைசார் அறிஞர்களின் எழுத்தாக்கங்களில் இருந்தும் பரிசீலிக்க முனைகிறது.

**ஆய்வின் குறிக்கோள்கள்**

இவ்வாய்வானது பின்வரும் குறிக்கோள்களை மையப்படுத்தி அமையப்பெற்றுள்ளது:

1. பெண்கள் தொடர்பான இஸ்லாத்தின் கருதுநிலையை அதன் அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவின் துணைகொண்டு நிறுவுதல்.
2. இஸ்லாத்தின் ஆரம்ப காலங்களில் அவ்வுரிமைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட முறைமைகளை பரிசீலித்தல்.

**முறைமை**

பண்பு ரீதியான ஆய்வு வடிவத்தை தழுவி முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்காக இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன், அல்ஹதீஸ் மற்றும் செந்நெறகால இஸ்லாமிய இலக்கியங்கள், தற்கால முஸ்லிம் அறிஞர்களின் ஆக்கங்கள் போன்றவற்றில் காணப்படும் பெண்களின் ஆன்மீக, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சார்ந்த உரிமைகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு தொகுத்தறிதல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

இஸ்லாம் ஆண், பெண் சமத்துவம் தொடர்பில் தெளிவாக சிந்தனைப்போக்கை கொண்டுள்ளதோடு பெண்களுக்கான ஆன்மீக,, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சார்ந்த பல்வேறு உரிமைகளையும் அவர்களின் இயல்புகளைக் கவனத்தில் கொண்டு பூரணமாக வழங்கியுள்ளது. ஆரம்பகால இஸ்லாமிய வரலாற்றில் பெண்கள் இவ்வுரிமைகளை அனுபவித்துள்ளமையைப் பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

**ஆண், பெண் சமத்துவம் தொடர்பான இஸ்லாத்தின் கருதுநிலை**

இஸ்லாம் பெண்களின் உரிமைகள் தொடர்பில் குறிப்பிடும் முதலாவது அடிப்படை சமத்துவமாகும். இறைவனின் படைப்பினங்கள் என்ற வகையில் ஆண், பெண் ஆகிய இரு பிரிவினரும் சம அந்தஸ்தும் மதிப்புமுடையவர்களாவர் (Saiful et al., 2019)[10]. அல்குர்ஆனின் பல வசனங்கள் இவ்வடிப்படையை வலியுத்துகின்றன. எடுத்துக்காட்டாக "இன்னும், நிச்சயமாக அவனே ஆண், பெண் என்று ஜோடியாகப் படைத்தான்" (அல்குர்ஆன், 53:45)[11] எனும் வசனமானது ஆண் பெண் ஆகிய இருவரும் ஒருவரின் மீது மற்றவர் சார்ந்துள்ள ஜோடிகளாகவே படைக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடுகிறது. அத்தோடு அல்குர்ஆன், 04:01, 30:21[11] போன்ற பல்வேறு வசனங்களும் இக்கருத்தை வலியுறுத்துவதோடு ஆண், பெண் ஆகிய இருவரும் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் இறைவனின் படைப்புக்கள் மற்றும் அவர்கள் இருசாராரும் ஒருவர் மற்றவரின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கிலேயே படைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் குறிப்பிடுகின்றன. இவ்வசனங்கள் எதிர்ப்பாலினத்தின் அந்தஸ்தை உணர்த்துவனவாகவும் அவர்களை மதிக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்வதற்கான வழிகாட்டியாகவும் அமையப்பெற்றுள்ளன (Al-Qahtani, 2016)[12].

அல்குர்ஆனின் இக்கருத்து பல்வேறு ஹதீஸ்கள் ஊடாகவும் உறுதிப்டுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக "பெண்கள் ஆண்களின் உடன்பிறப்புக்களாவர்" (அபூ தாவூத், 236)[a] எனும் நபிமொழியானது ஆண், பெண் ஆகிய இருபாலாரும் உடன் பிறப்புக்களைப் போன்ற சம அந்தஸ்து உடையவர்கள் என்ற கருத்தை உணர்த்துகிறது. அத்தோடு தாயின் காலடியில் சுவனம் இருப்பதாகவும் (நஸாஈ, 3104)[b], உலகில் அதிகம் தோழமை கொள்ளத் தகுதியானவர்களில் முதல் மூன்று இடங்களும் தாய்க்கு வழங்கப்பட்டு நான்காவது இடமே தந்தைக்கு வழங்கப்பட்டிருப்பாதாகவும் (புகாரி, 5971; முஸ்லிம், 2548) குறிப்பிடும் ஹதீஸ்களின் ஊடாக பெண்களின் தனித்துவத்தை கவனத்தில் கொண்டு ஆண்களை விட உயர்ந்த அந்தஸ்தும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது (Alfitri, 2014)[8] என்ததையும் அறிய முடிகிறது.

அத்தோடு வேறு சில இடங்களில் ஆண், பெண் ஆகிய இருபாலாரினதும் பாத்திரங்களையும் (role), பணிகளையும் கவனத்தில் கொண்டு அவர்களுக்கிடையில் வேறுபாடுகளை இஸ்லாம் குறிப்பிட்டுள்ளது. அதாவது ஆண், பெண் ஆகிய இரு பாலாகுக்கிடையில் மனிதர்கள் என்ற வகையில் எவ்வித ஏற்றத்தாழ்வுகளும் இல்லாவிடினும் அவர்களின் பொறுப்புக்களும், பணிகளும் வெவ்வேறானதாகும். இவ்வேறுபாட்டை கவனத்தில் கொண்டே அவர்களின் உடல் தோற்றமும், அமைப்பும், குணவியல்புகளும் அமையப்பெற்றுள்ளன. அல்குர்ஆனின் 03:36[11] வசனமானது இம்ரான் எனும் நல்லடியாரின் மனைவியைப் பற்றியதாகும். அப்பெண் தனக்கு ஒரு ஆண் பிள்ளை கிடைக்கப்பெறுமெனின்

[a] *இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் அல்அல்பானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (ஸஹீஹ் அல்ஜாமிஃ,* 2333).

[b] *இந்த ஹதீஸ் ஹஸன் ஸஹீஹ் தரத்தைச் சார்ந்தது என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் அல்அல்பானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (ஸஹீஹ் அந்நஸாஈ,* 3104).

அப்பிள்ளையை இறைவனின் ஆலயத்துக்கு பணிவிடைக்காக அமர்த்துவதாக நேர்ச்சை வைத்திருந்தார். எனினும் தனக்கு பெண் பிள்ளை கிடைக்கப் பெற்றதால் தனது நேர்ச்சையை நிறைவேற்ற முடியாது என உணர்ந்த அவர் இறைவனின் ஏற்பாட்டில் திருப்தி கொண்டு அதனை ஏற்றுக்கொண்டதாகக் குறிப்பிடும் அல்குர்ஆன் அவ்வசனத்தின் தொடரில் "ஆண் பெண்ணைப்போலல்ல" என்று அவர் சொன்ன இவ்வார்த்தையினூடாக குறிப்பிட முனைவது ஆண் பெண் ஆகிய இருவருக்கும் இடையில் காணப்டும் பணி வேறுபாடாகும். ஏனெனில் குறித்த அவ்வாலயத்தில் பணிவிடை செய்வதற்கு ஆண் பிள்ளையே பொருத்தமானதாகும். ஆனாலும் இறைவன் அவருக்கு பெண் பிள்ளையையே அருளியுள்ளான். அவளின் பொறுப்புக்களும் பணிகளும் வேறானதாகும் (Tantawi, 1992)[13].

இங்கு ஒரு விடயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆண், பெண் ஆகிய இரு பாலாரினதும் பணிகள் வேறுபட்டதாக இருப்பினும் இவ்விருவருக்கும் பொதுவான உரிமைகளையும் இஸ்லாம் வழங்கியுள்ளது. இவ்வுரிமைகளை அவர்கள் இருவருமே பெற்றுக் கொள்ள முடியும். ஆன்மீகம், கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பான உரிமைகள் அவர்கள் இருபாலாருக்கும் வழங்கப்ட்டுள்ளன. இவை கோட்பாட்டு வடிவில் மாத்திரம் இஸ்லாமிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டவையல்ல. ஆரம்பகால இஸ்லாமிய வரலாற்றில் சுதந்திரமாக பெண்கள் இவ்வுரிமைகளை அனுபவித்து வந்தமையை பல்வேறு சான்றுகள் உறுதிப்டுத்துகின்றன (Haddad, 2019)[7].

## ஆன்மீக உரிமைகள்

இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கிணங்க ஆன்மீக ரீதியாக ஆண்களைப் போன்றே பென்களும் கடமைகளும் பொறுப்புக்களும் உடையவர்களாவர் எனும் கருத்தை "ஒவ்வொரு ஆன்மாவும் தான் சம்பாதிப்பதற்குப் பிணையாக இருக்கின்றது." (அல்குர்ஆன், 74:38)[11] எனும் அல்குர்ஆனிய வசனம் மிகத் தெளிவாக உணர்த்துகிறது. அத்தோடு, "ஆணாயினும், பெண்ணாயினும் முஃமினாக இருந்து யார் (சன்மார்க்கத்திற்கு இணக்கமான) நற்செயல்களைச் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க தூய வாழ்க்கையில் வாழச் செய்வோம்; இன்னும் (மறுமையில்) அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிலிருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக கொடுப்போம்." (அல்குர்ஆன், 16:97)[11] எனும் அல்குர்ஆனிய வசனம் ஆன்மீக ரீதியான அனைத்து விடயங்களிலும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி அவர்களுக்கான பிரதிபலனும் அவர்களின் செயற்பாடுகளுக்கு ஏற்ப வழங்கப்படும் எனும் கருத்தை பிரஸ்தாபிக்கிறது.

எனவே, இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளான தொழுகை, ஸகாத், நோன்பு மற்றும் ஹஜ் ஆகிய அனைத்து ஆன்மீக கடமைகளும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி பெண்களின் மீதும் விதியானவையாகும். மேலும் ஏனைய வழிபாடுகளிலும் பெண்கள் ஈடுபட அனுமதிக்கப்பட்டவர்களாவர். அதுமாத்திரமல்லாது பெண்களின் இயல்பைக் கவனத்தில்

கொண்டு சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் இக்கடமைகளில் பல்வேறு சலுகைகளை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக பெண்களின் மாதவிடாய்க் காலங்களிலும் பிள்ளை பெற்றெடுத்து முதல் 40 நாற்கள் வரையும் ஐவேளைத் தொழுகை எனும் கடமையிலிருந்து அவர்கள் விதிவிலக்கப்பட்டவர்களாவர் (Bin Baz, n.d.)[14]. அதேபோல் குறித்த காலப்பகுதிகளிலும், கர்ப்பம் மற்றும் பிள்ளைக்கு பாலூட்டும் காலப்பகுதிகளில் ஏதேனும் கஷ்டமான நிலைகளின் போதும் நோன்பை விட்டு வேறு நாட்களில் நோற்றுக் கொள்வதற்கான சலுகையும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது (Bin Baz, n.d.)[15]. எனவே, இவ்விடயங்கள் ஊடாக இஸ்லாம் பெண்களுக்கு உத்தரவாதப்டுத்தியுள்ள ஆன்மீக ரீதியான உரிமைகள் மற்றும் அவர்களின் இயல்புகளைக் கவனத்தில் கொண்டு வழங்கப்பட்டிருக்கும் சலுகைகள் என்பன தெளிவாகின்றன.

**சமூக உரிமைகள்**

பெண்களின் சமூகம் சார்ந்த உரிமைகள் தொடர்பான இஸ்லாத்தின் வழிகாட்டலும் மிகவும் தெளிவானதாகும். இஸ்லாத்தின் வருகைக்கு முற்பட்ட அரேபியாவில் உயிறுடன் புதைக்கப்படல், பெற்றோரின் சொத்துக்கள் வழங்கப்படாமல் இருத்தல், திருமணமனத்தின் போது சுய விருப்பம் கவனத்தில் கொள்ளப்படாமை, சமூகத்துக்கும் குடும்பத்துக்கும் சுமையாக கருதப்படல் மற்றும சமூகப் புறமொதுக்கம் போன்ற சமூக ரீதியான பல்வேறு வன்முறைகளுக்கு பெண்கள் உட்படுத்தப்பட்டனர் (Lone et al., 2015)[5].

இவ்வாறான கொடிய மரபுகளை கண்டித்து பெண்களின் சமூகம் சார்ந்த அனைத்து உரிமைகளையும் இஸ்லாம் உத்தரவாதப்படுத்தியது. எடுத்துக்காட்டாக அல்குர்ஆன் 81: 8-9[11] வசனங்களானவை பெண்கள் உயிருடன் புதைக்கப்படுவதையும் 16: 58-59[11] வசனங்களானவை பெண்களைப் பெற்றெடுப்பது இழிவாகக் கருதப்பட்ட சமூக மனப்பாங்கையும் வன்மையாகக் கண்டிப்பனவாகவும் அமையப்பெற்றுள்ளன. அத்தோடு “யார் ஒருவரின் பொறுப்பின் கீழ் மூன்று பெண் பிள்ளைகள் அல்லது சகோதரிகள் இருந்து அவர்களை நல்ல முறையில் கவனித்துக் கொள்கிறாரோ அவர்கள் அவருக்கு நரகிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான திரையாக இருப்பார்கள்.” (ஸஹீஹ் அல்ஜாமிஃ, 5372)[c] எனும் நபிமொழியினுடாக பெண்களின் சமூகம் சார்ந்த உரிமைகள் தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்ற நீண்டகால இலக்கோடு இஸ்லாம் பல்வேறு வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளமை தெளிவாகிறது.

இவ்வுரிமைகளுள் ஒன்றாகவே பெண்களின் கல்வி உரிமையும் அயைப்பெற்றுள்ளது. “அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும்” (இப்னு மாஜா, 224)[d] எனும்

[c] *இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் அல்அல்பானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்* (ஸஹீஹ் அல்ஜாமிஃ, 5372).

[d] *இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் அல்அல்பானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்* (ஸஹீஹ் அல்ஜாமிஃ, 3914).

நபிமொழியானது ஒரு ஆண் கல்வித்துறையில் முன்னேறிச் செல்வதைப்போன்று பெண்களும் ஈடுபடுவதற்கான உந்துதலை வழங்குகிறது. ஆரம்பகால இஸ்லாமிய சமூகத்தில் கல்வி ரீதியான பெண்களின் பங்களிப்பு பல்வேறு வழிகளில் பிரதிபலித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இஸ்லாமிய வரலாற்றில் முக்கிய அறிஞர்களுள் ஒருவரான இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி அவர்கள் இறைதூதரின் தோழர்களின் வரலாற்றைத் தொகுத்த "அல்இஸாபா" எனும் நூலில் 1500க்கு மேற்பட்ட நபித்தோழியர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். அவர்களில் பலர் இஸ்லாமிய சட்டத்துறை, ஹதீஸ் துறை மற்றும் இலக்கியத்துறை போன்ற பல்வேறு துறைகளில் ஆழ்ந்த புலமை கொண்டவர்களாவர் (Jumah, 2015)[16]. எடுத்துக்காட்டாக நபியவர்களின் மனைவியர்களான ஆயிஷா (ரழி), ஹப்ஸா (ரழி), உம்மு ஸலமா (ரழி), ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) போன்றோரும் நபியவர்களின் மகளான பாத்திமா (ரழி), அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரழி) போன்றோரும் இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த பல்வேறு ஹதீஸ்களை அறிவித்ததோடு இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த பல்வேறு விவகாரங்களுக்கான தீர்ப்புக்களை வழங்குவோராகவும் காணப்பட்டனர். அதேபோல் கன்ஸா (ரழி), ஷைமா பின்த் அல்ஹாரிஸ் (ரழி), ஆதிகா பின்த் ஸைத் (ரழி) போன்றோர் இலக்கியத்துறையில் பிரபலம் பெற்றவர்களாவர். மேலும் ஷிபா பின்த் அப்தில்லாஹ்[e] எனும் பெண் கற்பித்தல் மற்றும் மருத்துவ துறைகளில் பிரபலமாவராகக் காணப்பட்டாராவார் (Muhammad, 2013)[17].

அதேபோல் பல நபித்தோழிகள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தங்களிடம் காணப்பட்ட சந்தேகங்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொண்டனர் (முஸ்லிம், 332). வேறு சிலர் நபியவர்களிடம் வந்து மார்க்கத்தைக் கற்றுக் கொள்ள தங்களுக்கான பிரத்தியேக நாளொன்றை ஒதுக்கித் தரும்படி வேண்டிக் கொண்டனர் (புகாரி, 7310). எனவே, இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப காலப்பகுதிகளில் கல்விசார்ந்த பல்வேறு துறைகளில் பெண்கள் ஈடுபட்டு வந்தமைக்கான சான்றுகளினூடாக பெண்களுக்கான கல்விசார்ந்த உரிமைகள் நடைமுறையில் இருந்து வந்தமையை அறிய முடிகிறது.

பெண்களின் திருமணம் சார்ந்த உரிமைகளும் இவ்வாறானவையே ஆகும். திருமணத்தின் போது பெண்களின் சம்மதத்துடனே திருமனம் நடைபெற வேண்டும் (புகாரி, 5136; முஸ்லிம், 1419) என்பதே இஸ்லாத்தின வழிகாட்டலாகும். அத்தோடு பலவந்தமாக தனது சம்மதமின்றி திருமணம் முடித்துவைக்கப்படும்போது அத்திருமணத்தை ரத்து செய்யும் உரிமையும் (அபூதாவூத், 2096)[f] பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குழந்தை வளர்ப்பிலும் ஆண், பெண் ஆகிய இருபாலாரும் பொறுப்புவாய்ந்தவர்களாக இருப்பினும் குழந்தை பெற்றெடுக்கும் இயல்பு, மற்றும் வளர்ப்பில் தாயின் வகிபாகம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு மரியாதை செலுத்தப்பட வேண்டும்

[e] *இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் ஷுஐப் அல்அர்னாஊத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (தக்ரீஜு ஸாத் அல்மஆத்*, Vol.4, pp.169.).

[f] *இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் அல்அல்பானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (ஸஹீஹ் அபீ தாவூத்*, 2096).

(அல்குர்ஆன், 31:14)[11] என இஸ்லாம் வழிகாட்டுகிறது. அத்தோடு "உங்களில் மிகச் சிறந்தவர் உங்களின் குடும்பத்தவருக்கு சிறந்தவரேயாவார்) (இப்னு மாஜா, 1977)[g] எனும் ஹதீஸானது குடும்ப விடயங்களில் பெண்களுக்கு ஒத்தாசையாக நடந்த கொள்ளும்படி வழிகாட்டும் அதேவேளை புகாரி, 676 ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் மனைவியருடன் அவர்களின் வேலைகளில் பங்குகொண்டுள்ளமையை தெளிவுபடுத்துகின்றது. மேலும் குடும்பத்தினருக்கான செலவு மற்றும் பாதுகாப்புப் பொறுப்பு ஆணைச் சார்ந்ததாகும் (புகாரி, 2409; முஸ்லிம், 1829) என இஸ்லாம் குறிப்பிடுகிறது. எனவே, குடும்ப விடயங்களில் இவ்விருவரின் பொறுப்புக்களும் காணப்படுகின்றமையால் (அல்குர்ஆன், 02:233) குழந்தைகள் தொடர்பில் பெற்றோர்கள் இருவருக்கும் உரிமையை வழங்குவதோடு அவர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கும் வண்ணம் தனது வழிகாட்டல்களை இஸ்லாம் வழங்கியுள்ளது.

## பொருளாதார உரிமைகள்

பெண்களின் பொருளாதார உரிமைகள் தொடர்பிலும் இஸ்லாம் மிகத் தெளிவான போதனைகளை வழங்கியுள்ளது. "ஆண்களுக்கு, அவர்கள் சம்பாதித்த(வற்றில் உரிய) பங்குண்டு; (அவ்வாறே) பெண்களுக்கும், அவர்கள் சம்பாதித்(வற்றில் உரிய) பங்குண்டு." (அல்குர்ஆன், 04:32)[11] எனும் அல்குர்ஆனிய வசனமானது தமது வாழ்வாதாரத்துக்குத் தேவையானவற்றை தேடிக் கொள்வதற்கான அனுமதியை வழங்குவதோடு பெண்கள் சொத்துக்களை உரித்தாக்கிக் கொள்வதற்கான அனுமதியையும் வழங்குகிறது.

அத்தோடு "(ஆண், பெண் இருபாலாரில்) அல்லாஹ் சிலரை சிலரைவிட மேன்மைப்படுத்தி வைத்திருப்பதனாலும் (ஆண்கள்) தங்கள் சொத்துகளிலிருந்து (பெண் பாலாருக்காகச்) செலவு செய்து வருவதினாலும், ஆண்கள் பெண்களை நிர்வகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்." (அல்குர்ஆன், 04:34)[11] எனும் வசனமானது ஒரு பெண் தாய், மகள், சகோதரி, மனைவி போன்ற எவ்வகையான உறவு முறையில் இருப்பினும் அவளது செலவீனங்கள் அனைத்தும் ஆணின் மீதுள்ள பொறுப்பாகும் என்பதையே வலியுறுத்துகிறது. அத்தோடு மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு செலவழிக்க வேண்டிய கடமையில் கணவன் பொடுபோக்காக செயயற்படும் பட்சத்தில் அவரது அனுமதியின்றி தனக்கும் குழந்தைகளுக்கும் தேவையான செலவை எடுத்துக் கொள்வதற்கான அனுமதிம் (புகாரி, 3825; முஸ்லிம், 1714) இஸ்லாத்தில் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் ஆண்களின் நிலையைக் கருத்தில் கொண்டு அப்பெண் விரும்பினால் அவள் சம்பாதித்தவற்றில் ஒருபகுதியை அவர்களுக்கு கொடுத்துதவுவதற்கான அனுமதியையும் (இப்னு ஹிப்பான், 4247)[h] இஸ்லாம் வழங்கியுள்ளது. மேலும். இஸ்லாத்துக்கு முற்பட்ட காலப்பகுதிகளில் பெண்களுக்கு வாரிசுச் சொத்துரிமை (inheritence) மறுக்கப்பட்டாலும் இஸ்லாம் பெண்களுக்கு அவ்வுரிமையை

[g] *இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் அல் அல்பானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (ஸஹீஹ் இப்னு மாஜா,* 1977).

[h] *இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் அல் அல்பானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (இர்வாஃ அல்கலீல்,* Vol. 1, pp.390).

உத்தரவாதப்படுத்தியுள்ளது (Al-Shaltuni, 2019)[18]. வாரிசுச் சொத்துப் பங்கீட்டில் ஆண்கள், பெண்களுக்கிடையிலான மற்றும் ஒரு பெண் தாய், மனைவி, சகோதரி, பிள்ளை போன்ற பல்வேறு நிலைகளின் போதான பங்கீடுகள் தொடர்பில் மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாவும் அல்குர்ஆனிய வசனங்கள் (அல்குர்ஆன், 04:11-12, 176)[11] குறிப்பிட்டுள்ளன. மேலும் இச்சொத்துக்கள் ஒரு பெண் பருவமடைவதற்கு முன்னரும் அவளுக்கு உரித்தாக முடியுமானவையாகும் (Ibn Kathir, 2000)[19].

அதேபோல் “நம்பிக்கை கொண்டவர்களே! பெண்களை (அவர்கள் மனப் பொருத்தம் இல்லாத நிலையில்) நீங்கள் பலவந்தப்படுத்தி அனந்தரமாகக் கொள்வது உங்களுக்கு கூடாது” (அல்குர்ஆன், 04:19) எனும் வசனமானது பெண்களின் விருப்பமோ சம்மதமோ இன்றி அவர்களது சொத்துக்ளை வலுக்கட்டாயமாக அல்லது அச்சுறுத்தி அபகரித்துக்கொள்வதை முற்றாக தடைசெய்துள்ளது.

அத்தோடு திருமணத்தின் போது தனக்குத் தேவையான அளவு அன்பளிப்பை கணவரிடமிருந்து கேட்டுவாங்கிக் கொள்ளும் (மஹர் பெறும்) உரிமையையும் (அல்குர்ஆன், 04:04,24, 33:50)[11] பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்களும் திருமணத்தின் போது தனது மனைவியருக்கு 500 திர்ஹம்கள் மஹர் தொகையாக கொடுத்தமையை முஸ்லிம், 1426 எனும் ஹதீஸின் ஊடாக அறிய முடிகிறது.

இங்கு இன்னுமொரு முக்கிய யதார்த்தமும் கவனத்தில் கொள்ளத்தக்கது. அதாவது பெண்ணின் சொத்துக்கான ஏகபோக உரிமை இஸ்லாமிய மூலாதாரங்களின் வழிகாட்டல்கள் ஊடாக உத்தரவாதப்படுத்தட்டுள்ளது. தந்தை அல்லது கணவன் என யாராக இருப்பினும் அவளது சொத்துக்களை அனுமதியின்றி எடுப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவளது சொத்துக்களில் விரும்பியவாறு கொடுக்கல் வாங்கலில் ஈடுபட அவளுக்கு அனுமதியுண்டு. அத்தோடு இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கிணங்க பெண்ணானவள் பொருளாதார ரீதியாக பொறுப்புக்கள் குறைந்தவளாவாள். அவளது செலவீனத்துக்கான பொறுப்பு ஆணைச் சார்ந்ததாகும். இவ்வாறான நியாயங்களைக் கருத்தில் கொண்டே சொத்துப் பங்கீட்டின் பெண்ணுக்கு கிடைப்பதைப் போன்று இரு மடங்கு ஆணுக்கு கிடைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. அதாவது செலவழிக்கும் பொறுப்பு மற்றும் திருமணத்தின் போது அன்பளிப்பு வழங்குதல் (மஹர்) போன்ற பொருளாதார விடயங்கள் ஆணைச் சார்ந்திருப்பதைக் கவனத்தில் கொண்டே சொத்துப் பங்கீட்டில் ஆண்களுக்கு இரு மடங்கு வழங்குமாறு இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது (Lone et al, 2015)[5].

கெண்கள் உத்தியோககங்களில் ஈடுபடுவதையும் இஸ்லாம் அனுமதித்துள்ளது. நபி (ஸல்) காலத்தில் ஆயிஷா (ரலி), உம்மு அய்மன் (ரழி), ஹம்னா பின்த் (ஜஹ்ஷ்) (ரழி), உம்மு ஸுலைம் (ரழி), உம்மு அதிய்யா (ரழி) போன்ற பலர் போரின்போது படை வீரர்களுக்கு உணவு தயாரித்தல், நீர் புகட்டல் மற்றும் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்தல் (தாதிகள்) (புகாரி, 2880; முஸ்லிம் 1811, 3380; மஜ்மஃ அல்ஸவாஇத், 15424) மற்றும் ஷிபா பின்த் அப்தில்லா எனும் பெண் குறிப்பாக தோல் நோய்களுடன் தொடர்புபட்ட நோய்களுக்கு மருத்துவமளித்தல்

(Rajab, 2007)[20] போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளமையை அறிய முடிகிறது. இவ்வாறான பல சான்றுகள் ஊடாக பெண்கள் தங்களின் இயல்புகளு;க்கு உகந்த உத்தியோகங்களில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றமையும் அது வரவேற்கத்தக்க விடயமாகும் என்பதும் தெளிவாகிறது.

எனவே, இஸ்லாத்தின் பல்வேறு வழிகாட்டல்கள் மற்றும் வரலாற்று சான்றுகள் ஊடாக பெண்களின் இயல்புகளைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கான பொருளாதாரம்சார் உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளமையை அறிய முடிகிறது.

## அரசியல் உரிமைகள்

பெண்களின் அரசியல்சார் உரிமைகள் தொடர்பான இஸ்லாத்தின் வழிகாட்டல்களும் மிகவும் தெளிவானவையாகும். தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் அரசியல் சார்ந்த விடயங்களில் சுதந்திரமாக பங்குகொள்வதற்கான உரிமையை இஸ்லாம் பெண்களுக்கு உத்தரவாதப்படுத்தியுள்ளது.

நவீன உலகில் ஜனநாயக முறையில் தலைவரை தேர்ந்தெடுக்கும் முறைக்கு நிகராக நபி (ஸல்) காலத்தில் உறுதிமொழியளித்தல் (பய்அத்) எனும் நடைமுறை காணப்பட்டது. இஸ்லாமிய வரலாற்றில் மதீனா நோக்கிய ஹிஜ்ரத்துக்கு அடித்தளமாக அமைந்த இரண்டாவது அகபா உடன்படிக்கையின்போது மதீனாவிலிருந்து வந்து நபி (ஸல்) அவர்களை தலைவராக ஏற்றுக்கொள்வதாக உறுதிமொழி வழங்கியவர்களுள் இரு பெண்களும் அடங்குகின்றனர் (அஹ்மத், 15237)[i] எனும் தகவலைக் குறிக்கும் ஹதீஸின் மூலமாக ஆட்சித் தலைவரை தேர்ந்தெடுப்பதில் பெண்களின் பங்குபற்றுதல் மற்றும் அவர்களின் அரசியலுடனான ஈடுபாடு தொடர்பான இஸ்லாத்தின் அனுமதி ஆகியவை தெளிவாக புலப்படுகின்றன. அதேபோல் மதீனாவில் ஆட்சித் தலைவர் என்ற வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெண்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் உறுதிமொழிகளை வழங்கிச் சென்றுள்ளமை (புகாரி, 1182; முஸ்லிம், 4103) தொடர்பில் பல்வேறு ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டிருப்பதனூடாக பெண்களின் அரசியல் ரீதியான உரிமைகள் ஆரம்பகால இஸ்லாமிய வரலாற்றில் உத்தரவாதப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்திருப்பதை அறிய முடிகிறது.

அத்தோடு நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இஸ்லாத்தை எத்திவைத்த ஆரம்ப காலப்பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறைகளின் விளைவாக

[i] *இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் அல்அல்பானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (முஹம்மத் அல்கஸ்ஸாலி, பிக்ஹ் அஸ்ஸீரா (இமாம் அல் அல்பானி அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி*, pp.161.).

இஸ்லாமிய வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட ஹபஷாவை நோக்கிய முதலாவது ஹிஜ்ரத் மற்றும் மதீனாவை நோக்கிய இரண்டாவது ஹிஜ்ரத் பயணங்களின் போதும் பெண்களும் பங்குகொண்டமை (புகாரி, 3905) மற்றும் நபியவர்களின் மதீனாவை நோக்கிய ஹிஜ்ரத்தின் போது அபூ பக்கர் (ரழி) அவர்களின் மகளான அஸ்மா (ரழி) அவர்கள் பல்வேறு வகைகளில் மேற்கொண்ட உதவிகள் (அஹ்மத், 26957)[j] போன்ற பல்வேறு ஹதீஸ்களும் பெண்களின் அரசியலுடனாட ஈடுபாட்டுக்கான சான்றுகளாக அமையப்பெற்றுள்ளன.

அரசியல் உரிமைகளுள் ஆலோசனைகள் வழங்கும் உரிமை மிக முக்கியமானதாகும். இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப காலப்பகுதிகளில் பல்வேறு சூழ்நிலைகளில் பெண்களும் தமது ஆலோசனைகளை வழங்கியுள்ளமையை பல ஹதீஸ்கள் தெளிவுபடுத்துகின்றன. ஹுதைபிய்யா உடன்படிக்கையின் பின்னர் ஸஹாபாக்களை எவ்வாறு வழிநடத்த வேண்டும் என்பது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் தனது மனைவியான உம்மு ஸலமாவின் ஆலோசனை கேட்டு அதன்படியே செயற்பட்டார்கள் (புகாரி, 2731). அதேபோல் நபி (ஸல்) அவர்களின் மகளான ஸைனப் (ரழி) அவர்கள் தனது கணவரான அபுல் ஆஸ் தொடர்பில் ஆலோசனை வழங்கியமை (முஸன்னப் அப்திர் ரஸ்ஸாக், 12644)[k], மக்கா வெற்றியின் போது உம்மு ஹானிஃ பின்து அபீ தாலிப் எனும் பெண் முஸ்லிம் அல்லாத தனது உறவினர்கள் தொடர்பில் நபியவர்களிடன் ஆலோசனை கூறியமை (அஹ்மத், 26892)[l] போன்ற பல்வேறு நிகழ்வுகளும் இவற்றுக்கான தெளிவான சான்றுகளாக அமையப்பெற்றுள்ளன.

இவ்வாறான பல வழிகாட்டல்களின் மூலம் இஸ்லாம் பெண்களுக்கு உத்தரவாதப்படுத்தியுள்ள அரசியல் சார்ந்த உரிமைகள் மற்றும் அவற்றில் பெண்கள் பங்கொண்டு சுதந்திரமாக செயற்பட்டுள்ளமை போன்ற பல்வேறு விடயங்கள் தெளிவாகின்றன. மேற்கூறப்பட்ட விடயங்கள் ஊடாக இஸ்லாம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையில் சமத்துவத்தைப் பேணும் அதேவேளை அவர்களின் இயல்புகளுக்கேற்ப அவர்களுக்கு வித்தியாசமான பொறுப்புக்களையும் கடமைகளையும் வழங்குவதோடு அவர்கள் ஒவ்வொருவரின் உரிமைகளையும் மிகத்துள்ளியமாக வரையறை செய்துள்ளமையை அறிந்து கொள்ள முடிகிறது. இதனூடாக நேர்த்தியான புரிந்துணர்வின் அடிப்படையிலான சமூகக் கட்டமைப்பு உருவாக்கபட வேண்டும் என்பதே இஸ்லாத்தின் பிரதான இலக்காகும் (Lone at al., 2015; Al-Qahtani, 2016)[5,12].

பெண்களுக்கான பல்வேறு உரிமைகளை இஸ்லாம் வழங்கியிருப்பினும் பொது நலனையும் பெண்களின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு சில வரையறைகளை அது

---

[j] *இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் ஷுஐப் அல்அர்னாஊத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (தக்ரீஜு ஸியர் அஃலாம் அந்நுபலாஃ*, Vol.2, pp.290.).

[k] *இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் ஷுஐப் அல்அர்னாஊத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (தக்ரீஜு ஸியர் அஃலாம் அந்நுபலாஃ*, Vol.3, pp.202).

[l] *இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறைசார்ந்த நவீன இஸ்லாமிய அறிஞரான இமாம் ஷுஐப் அல்அர்னாஊத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (தக்ரீஜ் அல்முஸ்னத்*, 26892).

வகுத்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். இவற்றில் முறையற்ற ஆண், பெண் கலப்பு, அந்நிய ஆடவருடன் தனித்திருத்தல் மற்றும் பாதுகாப்பற்ற சூழலில் பெண்கள் நெருங்கிய உறவினரின் துணையின்றி பிரயாணம் செய்தல் (புகாரி, 1862; முஸ்லிம், 1341) போன்ற பெண்களுக்கு பாதிப்பாக அமையும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இஸ்லாம் விளிப்பூட்டியுள்ளமை (Haddad, 2019)[7] குறிப்பிடத்தக்கவையாகும்.

பெண்களின் இயல்புகளையும், பண்புகளையும் கவனத்தில் கொண்டு அவர்களுக்கான உரிமைகளை இஸ்லாம் வரையறை செய்வதைப் போல் ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரின் உடலமைப்புக்குமேற்ப அவர்களுக்கான ஆடை முறையை இஸ்லாம் குறிப்பிடுகிறது. இம்முறையை இஸ்லாம் குறிப்பிடும் மிகப்பிரதானமான நோக்கம் ஒவ்வொருவரின் தனித்துவமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாகும். பெண்களாக இருப்பின் அந்நிய ஆடவர்கள் முன் தோன்றும் போது தமது மணிக்கட்டுப்பகுதி மற்றும் முகம் தவிர்ந்த அனைத்துப்பகுதிகளையும் மறைத்துக் கொள்ளும்படி இஸ்லாம் வலியுறுத்துகிறது (அல் குர்ஆன், 24:31)[11]. இதன் நோக்கம் பெண்களை பாதுகாப்பதேயாகும். இஸ்லாமிய வழிகாட்டல்களின் படி பெண்களின் ஆடைக்கான வரையறைகளைப் பற்றியே இஸ்லாம் குறிப்பிடுகிறது. இதனூடாக ஒரு முஸ்லிம் பெண் தான் சார்ந்திருக்கும் சமூக மரபுகளைப்பேணி இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு உட்பட்டு எவ்வகையான ஆடைகளையும் அணிந்து கொள்ள முடியும். அது பெரும்பான்மை முஸ்லிம் நாடுகளின் ஆடைக் கலாசாரத்தை ஒத்ததாகவோ அல்லது கறுப்பு போன்ற ஒரு குறிப்பிட்ட நிறத்தில் அமைந்ததாகவோ இருக்கவேண்டும் என்பதில்லை (Mansoor, 2015)[21].

**முடிவுரை**

பெண்களின் உரிமைகள் தொடர்பிலான இஸ்லாமியக் கண்ணோட்டம் மிகவும் தெளிவானதும் நீதமானதுமாகும். மனிதர்கள் என்ற வகையில் ஆண், பெண் ஆகிய இருவரும் சமமானவர்களாக இருப்பினும் அவர்களின் இயல்புகளைக் கவனத்தில் கொண்டே அவர்களுக்கான கடமைகளையும் பொறுப்புக்களையும் உரிமைகளையும் இஸ்லாம் வரையறை செய்துள்ளது. அந்தவகையில் பெண்களின் ஆன்மீக, சமூக், பொருளாதார, அரசியல் சார்ந்த அனைத்து உரிமைகளையும் இஸ்லாம் தனது மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவினூடாக வழங்கயிருப்பது மாத்திரமன்றி ஆரம்பகால இஸ்லாமிய சமூகத்தில் அவற்றை பெண்கள் சுதந்திரமாக அனுபவித்தும் வந்துள்ளமையை பல்வேறு வரலாற்று சான்றுகள் தெளிவாக உணர்த்துகின்றன. இவ்வாறான பல்வேறு துறைசார் உரிமைகளை இஸ்லாம் உத்தரவாதப்படுத்தியிருப்பது மாத்திரமன்றி பொதுநலன் மற்றும் பெண்களின் பாதுகாப்புக் கருதி குறித்த உரிமைகளை அனுபவிப்பதில் பல்வேறு வரையறைகளையும் ஒழுங்குகளையும் அது வகுத்துள்ளமையானது இஸ்லாமிய ஷரீஆவின் நிலைதன்மைக்கு எடுத்துக்காட்டாகவும் புரிந்துணர்வின் அடிப்படையிலான உறுதியான சமூகக் கட்டமைப்பின் உருவாக்கத்துக்கான முன்மாதிரியாகவும் அமையவல்லது.

எனினும் பெண்களின் உரிமைகள் தொடர்பான இஸ்லாத்தின் வழிகாட்டல்களுக்கும் நவீன உலகில் அவற்றின் நடைமுறைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் நிலவுவதை பல்வேறு ஆய்வு முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளன (Galloway, 2014; Haddad, 2019; Alfitri, 2014; Ali et al., 2011)[2,7,8,22]. இந்நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாத்துக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன (Alfitri, 2014)[8]. அத்தோடு பலதாரமணம், கலப்புத் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை மற்றும் சாட்சியம் போன்ற பல்வேறு விடயங்களில் இஸ்லாம் ஆண், பெண் ஆகியோருக்கு இடையில் குறிப்பிட்டிருக்கும் வேறுபாடுகள் தொடர்பிலும் பல்வேறு குறிறச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன (Chishti, 2012)[23].

எனவே, இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பல்வேறு துறைகள் சார்ந்த உரிமைகள், மற்றும் அவற்றின் நடைமுறைகள், பெண்களின் உரிமைகள் தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள், இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள் தொடர்பான பாரம்பரிய மற்றும் நவீன இஸ்லாமிய அறிஞர்களின் அணுகுமுறைகளுக்கு இடையிலான ஒப்பீடு, மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனங்கள், பிராந்திய சட்டங்கள் மற்றும் இஸ்லாம் அவை தொடர்பில் குறிப்பிட்டிருக்கும் வழிகாட்டல்களுக்கிடையிலான ஒப்பீடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் தனியான ஆய்வுகளை மேற்கொள்வதனூடாக பல்வேறு துறைகளில் பெண்களின் உரிமைகள் தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டம் தொடர்பில் மேலும் தெளிவாக அறிந்து கொள்ள உறுதுணையாக அமையும்.

**References:**


1. Naja, W.F., Nafrin, M.B. &.Nibras, K.M. (2018). Islam Pengalukku Valangiyulla Porulathara Urimaigal Thodarbana Nadaimuraigalum, Avatrai Petrukkolvathil Pengal Ethirnokkum Savalgalum [Procedures for the Economic Rights Granted to Women by Islam and the challenges faced by women in obtaining them: A study based on Hill Village 01 of Sammanthurai Area]. Paper presented at 5th International Symposium of Faculty of Islamic Studies and Arabic Language on *Sustainable Development through Arabic and Islamic Studies*, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3430
2. Galloway, Sonia. D. (2014). *The Impact of Islam as a Religion and Muslim Women on Gender Equality: A Phenomenological Research Study* (Doctoral dissertation, Graduate School of Humanities and Social Sciences of Nova Southeastern University, Florida, United States). Retrieved from https://nsuworks.nova.edu/shss_dcar_etd/14/
3. Al-Habdan, Muhammad, Abdullah. (n.d.). *Dulm al-Mar'a (Oppression to Women)*. Author. Available at https://www.noor-book.com/
4. Thiruchandran, Selvi. (1998) *Peṇṇilaivātamum Kōtpāṭṭu Muraṇpāṭukaḷum: Oru Samūkaviyal Nōkku* [Feminism and Theoretical Contradictions: A Sociological Perspective]. Chennai: Institute of Women's Education and Research.

5. Lone, Naveed. A., Sumaiya, Hurmat. B. & Karima, Y. (2015, December 31). Status of Women in Islam: A Perspective. *Global Islamic Economics Magazine*, *43*, 61-69. Available at SSRN: https://ssrn.com/abstract=2739329
6. Jazeel, M.I.M., Askiya, M,A.R. & Nuskiya, S.M.F. (2017). Uḷahiṭuvala Piratēcatatil Samuga Sevai Paṇiyil Muslim Peṇkaḷiṉ Edupāṭum Avarkaḷ Mītāṉa Islāmiya Iyakkaṅkaḷiṉ Selvākkum [Muslim Women's Involvement in social service in Ulahiduwala Area and the Influence of Islamic Movements on them. Proceedings of 7th International Symposium on *Multidisciplinary Research for Sustainable Development*, 7th & 8th December 2017, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. http://www.seu.ac.lk/researchandpublications/symposium/7th/Inaternational%20Symposium%202017%20-%20SEUSL%20(87).pdf
7. Haddad, R. (2019). Understanding Muslim woman travel behaviour: A theoretical perspective. *Œconomica, 15*(6), 233-244. http://journals.univ-danubius.ro/index.php/oeconomica/article/view/5807/0
8. Alfitri, O. (2014). Women's Rights and Gender Equality Issues in Islamic Law in Indonesia: The Need to Re-Read Women's Status in the Islamic Religious Texts. *Mazahib, 13*(1), 23-38. https://doi.org/10.21093/mj.v13i1.349
9. Al-Abed, M.R. & Hamendi, N. (2018). Revisiting Labeling Theory: An Islamic Feminist Approach to Aboulela's "The Translator". *English Language and Literature Studies 8*(1), 28-33. http://doi.org/10.5539/ells.v8n1p28
10. Saiful, T., Yaswirman, Yuslim., Fendri, A. (2019). Gender Equality Perspective and Women Position in Islam [Paper presentation]. 1st International Conference on Law, Governance and Islamic Society (ICOLGIS 2019), *Advances in Social Science, Education and Humanities Research, 413*, pp.197-200. https://doi.org/10.2991/assehr.k.200306.212
11. *Holy Qur'an*. (Translation of the Meanings of The Noble Quran in the Tamil). (n.d.). King Fahd Complex For The Printing Of The Holy Qur'an Madinah, K.S.A. Available at: http://www.tamililquran.com/suraindex.asp .
12. Al-Qahtani, Vudha. M. (2016). *Al-Nisawiat fi Daw' Manhaj al-Naqd al-Islami* [Feminism in the Light of the Methodology of Islamic Criticism]. Jeddah, Saudi Arabia: Center for Women's Studies Researchers.
13. Tantawi, Muhammad. Seyid. (1992). *Al-Tafsir al-Wasit li al-Quran al-Karim*. Cairo, Egypt: Dar al-Ma'arif.
14. Ibn Baz. (n.d.). *Wajub Qada' Ramadan li Al-Hayid Idha Aftrat fih* [It is Obligatory to Make up Ramadan for a Menstruating Woman if She Breaks the Fast]. Retrieved from https://binbaz.org.sa/
15. Ibn Baz. (n.d.). *Siyam al-Mar'at al-Hamil wa al-Murdi* [Fasting of Pregnant and Breastfeeding Woman]. Retrieved from https://binbaz.org.sa/
16. Jumah, Ali. (2015). *Al-Dawr al-Ilmi li al-Mar'at fi Sadar al-Islam "al-Shabiat wa' Atharahuna fi Ilm al-Faqh"* [The Scientific Role of Women in Early Islam "The Companions and Their Impact on the Science of Jurisprudence"]. Retrieved from https://www.draligomaa.com/index.php/
17. Muhammad, Husam. (2013). *Al-Ulama': Tafdil al-Dhukur alaa al-Inath min Afa'l al-Jahiliya* [Scholars: Preferring Males over Females is an Act of Ignorance]. Retrieved from https://www.alittihad.ae/article/115467/2013/

18. Al-Shaltuni, Iisra' Ayman. (2019). *Haq al-Mar'at fi al-Mirath* [Woman's Right to Inheritance]. Retrieved from https://mawdoo3.com/
19. Ibn Kathir. (1999). *Tafsir Ibn Kathir*. Riyadh, Saudi Arabia: Dar Taibah.
20. Rajab, Muna. (2007). Al-Taarikh...wa Imra'a [History ... Woman]. Kotobarabia.com. http://www.kotobarabia.com/
21. Mansoor, M.A.M. (2015). *Siṟupāṉmai Vāḻvukkāṉa Koḷkai* Uruvākkam [Policy Formulation for Minority Life]. Retrieved from https://www.usthazmansoor.com/minority-policy/
22. Abid Ali, L., Jabeen, F. & Rahat, N. (2011). Islamic Tradition and Feminism: A Comparative Study of Theoretical Perspective. *International Journal of Business and Social Science, 2*(6), 157-167. http://ijbssnet.com/journals/Vol._2_No._6;_April_2011/17.pdf
23. Chishti, Muhammad, N. (2012). Gender Equality: Human Rights versus Islam. *Pakistan Perspectives, 17*(1), 102-122. http://search.proquest.com/openview/769dc29211c661737da9548d69d89f18/1?pq-origsite=gscholar&cbl=616532